தினமணி

# வாழை நார் பொருள்களுக்கு வாழ்வு கிடைக்குமா?

ஜே. லாசர்

First Published : 24 Feb 2010 01:37:37 AM IST

குலசேகரம், பிப்.23: பிளாஸ்டிக் பொருள்களுக்கு எதிரான விழிப்புணர்வு பரவலாக ஏற்பட்டுள்ள இச் சூழ்நிலையில், வாழை நார் பொருள்கள் தயாரிப்புத் தொழிலுக்கு புத்துயிர் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, இத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வாழை மரத்தில் இலை, காய், கனி, பூ, தண்டு என அனைத்தும் பயன்படுத்தப்படுகிறது. வாழை மட்டையிலிருந்து எடுக்கப்படும் நாரைக் கொண்டு பூ தொடுக்கலாம் என்றும் பலர் அறிந்திருப்பர்.

ஆனால், அதே நாரை மெல்லிய இழைகளாக மாற்றி நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களாகத் தயாரித்து வழங்குகிறது, கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் அருகேயுள்ள கொல்வேல் நார் தொழிலாளர் கூட்டுறவு சங்கம்.

வாழைத் தோட்டங்களில் குலைகள் வெட்டப்பட்ட பின்னர், வெட்டிப் போடப்படும் வாழை மரங்களிலிருந்து வாழை மட்டைகளைச் சேகரித்து அதைப் பக்குவமாக சீவி, அதிலிருந்து மெல்லிய வெண்மையான இழைகளைப் பிரித்து எடுக்கிறார்கள் கிராமத்துப் பெண்கள். பின்னர், அந்த இழைகளை கூட்டுறவு சங்கத்தில் விற்பனை செய்கின்றனர்.

கூட்டுறவு சங்கத்தில் உள்ள பெண்கள் அந்த இழைகளில் சாயமிட்டு பை, பூக்கூடை, மேசை விரிப்பு, உணவு மேசை விரிப்பு, செருப்பு, தொப்பி என விதவிதமான பொருள்களை கலை நேர்த்தியுடன் செய்து விற்பனைக்கு வைக்கின்றனர். இயந்திரங்களைப் பயன்படுத்தாமல் முழுக்க முழுக்க கைகளால் செய்யப்படும் இப்பொருள்களைத் தயாரிப்பதற்கு அதிக நேரம் தேவைப்படுகிறது. அதேவேளை, குறிப்பிட்ட அளவு விலைக்குமேல் இப் பொருள்களை விற்பனை செய்ய முடியாத காரணத்தால், இத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு குறைந்த வருவாயே கிடைக்கிறது.

பிளாஸ்டிக் பொருள்களின் ஆதிக்கம் மற்றும் அவற்றின் மலிவான விலை காரணமாக குடிசைத் தொழிலாக தயாராகும் வாழை நார் பொருள்கள் அவற்றுடன் போட்டி போட முடியாத நிலை உள்ளது. இதனால், இத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் அதிக வருவாய் பெற முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத இப் பொருள்களை வெளி நாட்டவர் விரும்பி வாங்குகின்றனர். மேலும், பெரிய ஹோட்டல்களிலும் பயன்படுத்துவதற்காக வாங்கப்படுகிறது. நடுத்தர மக்கள் இதை வாங்குவதில் ஆர்வம் காட்டுவதில்லை.

மேலும், போதிய அளவில் இப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்குரிய ஏஜென்சிகள் இல்லாததும் பெரும் குறை.

தற்போது பிளாஸ்டிக் பொருள்களுக்கு எதிரான விழிப்புணர்வு பரவலாக ஏற்பட்டுள்ள நிலையில், வாழை நார் உள்ளிட்ட தயாரிப்புகளுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இப் பொருள்களைத் தயாரிக்கும் பெண்கள் கூறுகின்றனர்.

இதுகுறித்து கொவேல் நார் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கச் செயலர் பி. நகோமி கூறுகையில், இச் சங்கம் 1962ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இந்த சங்கத்தில் சுமார் 150 பேர் உறுப்பினராக உள்ளனர். இங்கு தயாரிக்கப்படும் பொருள்கள் நேரடியாகவும், காதிபோர்டு வாயிலாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

முழுக்க முழுக்க கையினால் மற்றும் 100 சதவிகித வாழை நார் இழைகளால் தயாரிக்கப்படும் இப் பொருள்களை செய்ய அதிக நேரம் தேவைப்படும். இங்கு தயாரிக்கப்படும் பொருள்கள் 25 ரூபாய் முதல் விற்பனை செய்யப்படுகிறது.

சுற்றுலாத் தலங்களுக்கு வரும் வெளிநாட்டினர் இப் பொருள்களை விரும்பி வாங்குகின்றனர். மாடலிங் தொழில் செய்பவர்களும் அதிகம் வாங்குகின்றனர். மாடலிங் செய்வோருக்கு தேவைப்படும்வகையில் விதவிதமான செருப்புகள், ஆடைகள் இங்கு தயாரிக்கப்படுகிறது.

பிளாஸ்டிக் பொருள்களின் ஆதிக்கம் காரணமாக உள்ளூரில் இப் பொருள்களின் விற்பனை மந்தமாகவே உள்ளது. இப் பொருள்களை நீண்ட காலம் பயன்படுத்த முடியும். இப் பொருள்களுக்கு தயாரிப்புச் செலவுக்கேற்ற விலையை நிர்ணயிக்க முடியாததால், நாள் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.30 வரை தான் கூலி கிடைக்கிறது.

இதனால் தற்போது வாழை நார் எடுத்து வருபவர்களும், பொருள்கள் செய்பவர்களும் குறைந்துவிட்டனர்.

இயற்கை சார்ந்த சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத இப் பொருள்களைப் பயன்படுத்தும் ஆர்வம் மக்கள் மத்தியில் ஏற்பட வேண்டும். அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் இத் தொழிலை ஊக்கப்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

## நெல் கொள்முதல் விவசாயிகளிடம் சுரண்டல்

ப. இசக்கி

First Published : 24 Feb 2010 01:27:03 AM IST

திருநெல்வேலி, பிப். 23: நெற்றி வியர்வை நிலத்தில் விழ, பாடுபட்டு விளைவித்த நெல்லை விற்பனை செய்யச் செல்லும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில்
விவசாயிகளிடம் மறைமுக சுரண்டல்கள் நடைபெற்று வருகின்றன.

எடையில் கோளாறு, மூடை இறக்க கட்டாயக் கூலி, ஈரப்பதம் அதிகம் எனக் கூறி காத்திருக்க வைத்தல் போன்றவற்றால் இந்த மையங்களின் நோக்கமே அடிபட்டுபோகும் நிலை ஏற்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் பிசானப் பருவ நெல் அறுவடை தொடங்கப்பட்டுள்ளாதல் 15 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் மையங்கள் திறக்கப்பட்டுள்ளன. சில இடங்களில் கொள்முதல் மையங்களை திறக்க மாவட்ட ஆட்சியர் மு. ஜெயராமன் உத்தரவிட்டுள்ளார்.

பிசானப் பருவ அறுவடை தொடங்குவதற்கு முன்பு தனியாரிடம் ஒரு கோட்டை (150 கிலோ) நெல் விலை ரூ. 2,000 ஆக இருந்தது. தற்போது ரூ. 1,150 முதல் ரூ. 1,300 வரை உள்ளது. அரசின் நேரடி கொள்முதல் நிலையங்களில் 17 சதவீதம் ஈரப்பதம் உள்ள சன்ன ரக நெல்லுக்கு (100 கிலோ) ரூ. 1,100-ம், பெருவட்டு நெல்லுக்கு ரூ.1,050-ம் வழங்கப்படுகிறது. இதனால் தனியாரிடம் நெல்லை விற்பனை செய்வதைவிட அரசு கொள்முதல் நிலையங்களில் விற்றால் லாபம் என விவசாயிகள் கருதுகின்றனர். ஆனால் அந்த மையங்களில் விவசாயிகள் பல வழிகளில் சுரண்டப்படுகின்றனர்.

கொள்முதல் மையங்களில் கடந்த ஆண்டு மின்னணு தராசு பயன்படுத்தப்பட்டது. இந்த ஆண்டு மேடைத் தராசு பயன்படுத்தப்படுகிறது. இதனால் எடையில் துல்லியம் இல்லை. விவசாயிகள் கொண்டு வரும் நெல் 40 கிலோ மூடைகளாக எடை போடப்படுவதால் ஒவ்வொரு மூடைக்கும் ஓரிரு கிலோ கூடுதலாக செல்ல வாய்ப்பு இருப்பதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

மையங்களுக்குக் கொண்டு வரப்படும் நெல்லை வாகனங்களில் இருந்து விவசாயிகளே இறக்கி மையத்திற்குள் எடுத்துச் செல்ல அனுமதிப்பதில்லை. ஒவ்வொரு மையத்திலும் இருக்கும் சுமைத் தொழிலாளர்கள்தான் இறக்க வேண்டும் என்றும் அதற்கு ஒவ்வொரு மூட்டைக்கும் (40 கிலோ) ரூ. 8 கூலி கொடுக்க வேண்டும் என்றும் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். இதனாலும் விவசாயிகளுக்கு செலவு ஏற்படுகிறது.

இவை மட்டுமின்றி, மையத்திற்குக் கொண்டு வரப்படும் நெல்லில் ஈரப்பதம் கூடுதலாக இருப்பது சோதனையில் தெரிய வந்தால் நெல் காயும் வரை விவசாயிகள் அங்கே காத்துக்கிடக்க வேண்டியது இருக்கிறது. சிலர் மையத்தின் முன்பு நெல்லை உலரப் போட்டுவிட்டு காத்திருப்பது பார்க்க பரிதாபமாக இருக்கிறது.

இந்த தொந்தரவு எல்லாம் வேண்டாம் என்று கருதிதான் சில விவசாயிகள் அறுவடை களத்திலேயே தனியார் வியாபாரிகளிடம் நெல்லை விற்றுவிடுகின்றனர். அரசின் கொள்முதல் மையங்களால் அவர்களுக்கு பயன் கிடைக்காமல் போய்விடுகிறது.

""ஒரு விவசாயியிடம் குறைந்தபட்சம் 300 மூடைகள் நெல் இருந்து அவர்கள் எங்களுக்கு தகவல் தெரிவித்தால் நாங்களே அங்கே சென்று வாகனங்களில் ஏற்றி வந்துவிடுவோம். மின்னணு தராசைக் கவனமாகக் கையாள வேண்டும். இல்லையென்றால் பழுதாகி கொள்முதல் பாதிக்கப்படும் என்பதால் மேடை தராசு பயன்படுத்தப்பட்டு வருகிறது. கொள்முதல் மையங்களில் மூடைகளை இறக்க பணம் கேட்கும் கூலி தொழிலாளர்களுக்கும் எங்களுக்கும் தொடர்பு இல்லை" என்றார் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக உயர் அதிகாரி ஒருவர்.

ஆனால் அவர் கூறுவதற்கும், நடைமுறைக்கும் உள்ள இடைவெளியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். ஈரப்பதம் அதிகம் இருக்கும் நெல்லுக்கு அதற்கேற்றபடி விலையைக் குறைத்து கொள்முதல் செய்தால் விவசாயிகள் வீணாகக் காத்திருக்க வேண்டியது இருக்காது. தஞ்சை மாவட்டத்தில் 22 சதவீத ஈரப்பதம் வரை கொள்முதல் செய்யப்படுகிறது என்கின்றனர் விவசாயிகள்.

""ஞாயிற்றுக்கிழமை 58 மூடை நெல்லைக் கொண்டு வந்தேன். ஈரப்பதம் அதிகமாக இருப்பதாகக் கூறிவிட்டதால் காத்திருக்கிறேன். எப்போது எடை போட்டு பணம் தருவார்களோ தெரியாது" என்றார் முன்னீர்பள்ளம் மையத்தில் செவ்வாய்க்கிழமை நெல் மூடைகளுடன் காத்திருந்த தருவை விவசாயி கிருஷ்ணன்.

நெல்லில் இருக்கும் பதரை இயந்திரம் மூலம் நீக்கும்போது பதருடன் சிறிதளவு நெல்லும் சேர்ந்து கழியும். அந்த பதரை விவசாயிகள் அள்ளிச் செல்ல அனுமதி இல்லை என்றும் புகார் கூறப்படுகிறது. ஆனால், விவசாயிகள் விரும்பினால் அள்ளிச் செல்லலாம் என்கிறார் முன்னீர்பள்ளம் மைய பொறுப்பாளர்.

மையத்தின் இந்த குறைபாடுகள் நீக்கப்பட்டால்தான் விவசாயிகளுக்கு நிம்மதி. உணவு உற்பத்தியில் அவர்களுக்கு ஊக்கம் தொடரும். வருங்காலத்தில் அவர்கள் சேற்றில் கால்வைக்கத் தயங்கினால், நாம் சோற்றில் கை வைப்பது கஷ்டமாகும் நிலை ஏற்படும். சிந்தித்து செயல்படவேண்டியது அரசின் கடமை.

**கேரள விவசாயிகளுக்கு துல்லிய பண்ணைத் திட்ட பயிற்சி**

First Published : 24 Feb 2010 12:53:54 AM IST

கிருஷ்ணகிரி, பிப். 23: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பையூர் வேளாண்மை மண்டல ஆராய்ச்சி மையத்தின் மூலம் கேரள மாநிலம் கண்ணூர் மாவட்ட விவசாயிகளுக்கு துல்லிய பண்ணைத் திட்டம் குறித்து 2 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது.

2004-ம் ஆண்டு ஒருங்கிணைந்த கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டத்தில் துல்லிய பண்ணைத் திட்டம் தொடங்கப்பட்டது. 200 ஹெக்டேர் பரப்பளவில் தொடங்கப்பட்ட இத்திட்டம் தற்போது கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மட்டும் ஆயிரத்து 500 ஹெக்டேர் பரப்பளவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் குறைந்த நீர் கொண்டு அதிக மகசூல் பெறலாம். கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்டத்தில் துல்லிய பண்ணைத் திட்டம் மூலம் நிலக்கடலை, கரும்பு, மஞ்சள், மக்காச்சோளம், தக்காளி, மரவள்ளிக்கிழங்கு போன்ற பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் 2 நாள் பயிற்சி பெற கேரள மாநிலம் கண்ணூர் மாவட்ட விவசாயிகள் 38 பேர் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பையூர் ஆராய்ச்சி மையத்துக்கு வந்தனர். நிலையத்தின் தலைவர் மற்றும் பேராசிரியர்கள் அவர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

கிருஷ்ணகிரி, தருமபுரி மாவட்ட எல்லைப்பகுதியான அகரம் கிராமத்தில் துல்லிய பண்ணைத் திட்டத்தில் விவசாயம் செய்யும் விளைநிலங்களை கேரள விவசாயிகள் நேரில் பார்வையிட்டு விவரங்களை கேட்டறிந்தனர்.இதுகுறித்து கேரள மாநிலம், கண்ணூர் மாவட்ட வேளாண் அலுவலர் பேபி ரீனா கூறியது:

கேரளத்தில் 6 மாதங்கள் மழை காலம் ஆகும். மீதமுள்ள காலத்தில் காய்கறி உற்பத்தியை பெருக்க துல்லிய பண்ணைத் திட்டம் குறித்து அறிய விவசாயிகளுடன் வந்துள்ளோம் என்றார்.

விவசாயி ஜான் கூறியது: எங்கள் பகுதியில் கால்வாய் பாசனம் மூலம் நெல், தென்னை, பாக்கு, வாழை போன்ற பயிர்களை சாகுபடி செய்து வருகிறோம்.

தண்ணீர் பற்றாக்குறை உள்ள காலங்களில் துல்லிய பண்ணைத் திட்டம் மூலம் குறைந்த நீரில் பயிர் செய்யும் முறை குறித்து தெரிந்து கொண்டோம் என்றார்.

## பூச்சித் தாக்குதலில் இருந்து கத்தரியைக் காக்க யோசனை

First Published : 24 Feb 2010 12:00:00 AM IST

காஞ்சிபுரம், பிப். 23: கத்தரி விளைச்சலின் போது இயற்கை வேளாண் முறையை கையாண்டால், ஆரம்பத்திலேயே பூச்சித் தாக்குதலை தடுத்து நிறுத்தி விடலாம் என்று தோட்டக் கலை துணை இயக்குநர் எஸ்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

÷இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

÷காஞ்சிபுரம் மாவட்டத்தில் சுமார் 1800 ஏக்கர் பரப்பில் கத்தரி பயிரிடப்பட்டு வருகிறது. இதில் ரவ்யா, பச்சை நீலம், பன்சை உருண்டை, பூசா பர்பில், கிளஸ்டர், பாலூர்-1, இலவன்பாடி போன்ற கத்தரி ரகங்கள் பரவலாக அதிகளவில் பயிரிடப்படுகின்றன.

÷இவற்றில் பொதுவாக கத்தரியில் தண்டு மற்றும் காய்துளைப்பான் வெள்ளை ஈ, செம்பேன் போன்ற பூச்சிகளின் தாக்குதல் அதிகம் காணப்படும். இவற்றில் காய்த்துளைப்பான் என்கிற காய்புழுவின் தாக்குதலே அதிகம் காணப்படும். இப் பூச்சியை கத்தரி நாற்றுகள் உற்பத்தி செய்யும் முதற்கொண்டு இயற்கை அங்கக முறைகளை கையாண்டால் இப் பூச்சிகளின் தாக்குதலை தடுத்து நிறுத்த முடியும்.

÷முதலில் விதைகளை டிரைகோடர்மா விரிடி, பெவேரியா, பேசிலேனா, அசோஸ்பைரில்லம் போன்ற நுண்ணுயிர்களுடன் விதை நேர்த்தி செய்ய வேண்டும். கடைசி உழவின்போது ஏக்கருக்கு பத்து டன் நன்கு மக்கிய தொழுவுரம், 100 கிலோ வேப்பம் பிண்ணாக்கு, 500 கிலோ மண்புழு உரம், 2 கிலோ பாஸ்போபாக்டீரியா, 2 கிலோ அசைஸ் பைரில்லம், 1 கிலோ டிரைக்கோடர்மா விரிடி, 1 கிலோ சூடோமோனாஸ் போன்ற இயற்கை வேளாண்மை அங்கக நுண்ணுயிர் காரணிகளை இட வேண்டும்.

÷நாற்றுகள் நட்ட 7-ம் நாள் ஒரு சதவீத வேப்பம் பிண்ணாக்கு கரைசலை காதிபார் சோப் கரைசலுடன் கலந்து பூச்சி தாக்குதல் இருந்தாலும் இல்லாவிட்டாலும் தெளிக்க வேண்டும். பின்னர், 12 நாள்கள் கழித்து 0.03 சதவீதம் அசோடிரக்டின் என்கின்ற வேம்பு கலந்து தெளிக்க வேண்டும். பூ எடுக்கும் நேரத்தில் டிரைக்கோடர்மா கைலானிஸ் என்கின்ற முட்டை ஒட்டுண்ணிகளை இட வேண்டும்.

÷பின்னர் 15 நாள்களுக்கு ஒரு முறை 1 சத வேப்பம் பிண்ணாக்கு கரைசலை 3 முறைகள் தெளிக்க வேண்டும். இவ்வாறு இயற்கை வேளாண்மை சாகுபடி முறையை கையாண்டால் கத்தரியில் காய்புழுவின் தாக்குதலை அறவே தடுக்கலாம் என்றார்.

தினமலர்

### மக்காச்சோளம் அறுவடை தீவிரம்

பொள்ளாச்சி: ஆனைமலை சுற்றியுள்ள கிராமப்பகுதிகளில் மக்காச்சோளம் அறுவடை நடக்கிறது. தற்போது, விளைநிலங்களில் பயிர்கள் முற்றிய நிலையில், அறுவடை செய்யும் பணி தீவிரமாக நடக்கிறது. மக்காச்சோள கதிர்கள் தனியாக பிரித்தெடுக்கப்பட்டு உலர வைக்கப்படுகிறது. போதிய உலர் கள வசதியில்லாத விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திலும் உலர வைக்கின்றனர். சீசன் காலத்தின் போது விற்ப னை செய்வதை விட, இருப்பு வைத்து சில நாட் கள் கழித்து விற்பனை செய்தால் அதிக லாபம் கிடைக்கக்கூடிய சூழல் நிலவுகிறது. எனவே, பலரும் மக்காச்சோளத்தை இருப்பு வைத்து விற்பனை செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

### நெகமம் கொப்பரை கிலோ ரூ.30.90

பொள்ளாச்சி: நெகமம் சுற்றுப்பகுதி விவசாயிகள் 12 பேர், ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்திற்கு 62 மூட்டை கொப்பரையை கொண்டு வந்தனர். ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப் பாளர் சண்முகம் ஏலம் நடத்தினார். முதல் தர கொப்பரை 13 மூட்டையில், கிலோவுக்கு குறைந் தபட்சம் 29.75 ரூபாய் முதல், அதிகபட்சம் 30.90 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 49 மூட்டையில், கிலோவுக்கு குறைந்தபட்சம் 26.10 ரூபாய் முதல், அதிகபட்சம் 29.60 ரூபாய் வரை விலை கிடைத்தது. அதிகாரிகள் கூறியதாவது: வெளிமார்க்கெட்டில் தேங்காய் எண்ணெய் விலை சரிந்து வருவதால், கொப்பரை வரத்து குறைந்துள்ளது. அதேசமயம், கடந்த வாரத்தை காட்டிலும் இந்த வாரம் கொப்பரை விலை கிலோவுக்கு 35 பைசா குறைந்துள்ளது என்றனர்.

### மானிய விலையில் உளுந்து விதை வேளாண் உதவி இயக்குனர் தகவல்

புவனகிரி: கீரப்பாளையம் வட்டாரத்தில் உளுந்து விதை மற் றும் உரங்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது.இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் விஜயகுமார் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: சிதம்பரம் அடுத்த கீரப்பாளையம், நந்தீஸ்வரமங்கலம் வேளாண் விரிவாக்க மையங்களில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் உளுந்து "டி9' சான்று விதைகள் கிலோவிற்கு 20 ரூபாய் மானியத்திலும், தேசிய வேளாண் வளர்ச்சி திட் டத்தின் கீழ் சிங்சல்பேட், நுண்ணுரம் 50 சதவீத மானியத்திலும், ஐசோபோம் எண்ணைவித்து, தேசிய உணவு பாதுகாப்பு திட்டங்களில் ஜிப்சம் 50சதவீத மானிய விலையிலும் வழங்கப்படுகிறது என கூறப்பட் டுள்ளது.

### இயற்கை உரம் விற்பனை ஒழுங்குபடுத்த நடவடிக்கை

ஈரோடு: ""இயற்கை வேளாண்மையில், இயற்கை உரம் விற்பனையை ஒழுங்குபடுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது,'' என வேளாண் இணை இயக்குனர் கோபால் கூறினார். அவர் கூறியதாவது: தமிழகத்தில் இயற்கை வேளாண்மை முறையை விவசாயிகள் அதிகம் பின்பற்றி வருகின்றனர். இயற்கை வேளாண்மை செய்யவும், அவற்றின் மூலம் தரமான உணவுப் பொருளை உற்பத்தி செய்ய வேண்டும் என்பதிலும் ஆர்வமாக உள்ளனர். இயற்கை வேளாண்மையில் ரசாயன உரம் முற்றிலும் தவிர்க்கப்பட்டு, அங்கக ஈடுபொருட்களை விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். முழுமையாக அங்கக வேளாண்மை பயன்படுத்தி வேளாண்மை சான்று பெறவும் முயற்சி செய்து

வருகின்றனர். அவர்களின் நோக்கம் நிறைவேறும் வகையில், தரமான அங்கக இடுபொருட்களை வாங்கி பயன்படுத்தவும், அதற்கான வழிவகை செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி, எந்த வேளாண்மை அங்கக உரங்களும் கடைகளில் விற்பனை செய்யுபோது, தக்க சான்றிதழ் பெற்ற பின்னரே விற்பனை செய்ய வேண்டும். பதிவு செய்யாமல் விற்பனையாகும் உரங்கள் பறிமுதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அங்கக உரங்கள் அரசு நிர்ணயித்துள்ள அளவுகளில் நுண்ணுயிர்கள், எண்ணிக்கை மற்றும் உரச்சத்துக்களின் அளவு இருக்க வேண்டும். அதற்கான நடைமுறையை மத்திய அரசு உரப்பாதுகாப்பு சட்டத்தின் மூலம் வழிவகை செய்துள்ளது. அங்கக உரங்களில் தரத்தை நிர்ணயம் செய்யும் வகையில், கடைகளில் விற்கப்படும் அங்கக இடுபொருட்கள் மாதிரி எடுக்கப்பட்டு, உரிய ஆய்வுக்கூடங்களுக்கு அனுப்பப்படும். தரப்பரிசோதனை முடிவுகளின் படி தரமற்ற இடுபொருட்களின் மீது உரப்பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை தொடரப்பட்டு தண்டனை வழங்கப்படும். விவசாயிகள் கடைகளில் இடுபொருட்களை வாங்கும் போது, தரமான இடுபொருட்களை வாங்க வேண்டும். வாங்கிய இடுபொருட்களுக்கு ரசீது பெற வேண்டும். தரமான அங்கக இடுபொருட்களை பயன்படுத்தி விவசாயிகள் அதிக மகசூல் பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகள் வாழ்வில் ஏற்றம் பெற மாற்றம் தேவை அ.தி.மு.க., அமைப்புச் செயலாளர் பேச்சு

பள்ளிபாளையம்: "விவசாயிகள் மற்றும் நெசவு தொழிலாளர் வாழ்க்கையில் ஏற்றம் பெற, தமிழகத்தில் மாற்றம் தேவை' என, ஆர்ப்பாட்டத்தில் அ.தி.மு.க., அமைப்புச் செயலாளர் முத்துசாமி பேசினார். நூல் விலை உயர்வை மத்திய, மாநில அரசுகள் கண்டு கொள்ளாமல் இருப்பதாக கூறி, நாமக்கல் மாவட்ட அ.தி.மு.க., சார்பில், கண்டன ஆர்ப்பாட்டம் பள்ளிபாளையம் பஸ் ஸ்டாண்டில் நடந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு மாநில அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான முத்துசாமி தலைமை வகித்து பேசியதாவது:

மத்திய, மாநில அரசுகள் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த தவறி விட்டன. ஏழை, நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு வாழ்க்கை நடத்தி வருகின்றனர். விலை உயர்வின் காரணமாக நாளுக்கு நாள் விவசாயம், நெசவு தொழிலும் நசிந்து வருகிறது. விவசாயம், நெசவு தொழில் நலிவடைந்ததை அடுத்து விவசாய கூலி தொழிலாளர்கள், நெசவு தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். அதை நம்பியுள்ள லட்சக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். மாநில அரசு விவசாயம், நெசவு தொழில் முன்னேற்றத்துக்கு அக்கறை காட்டாமல் மெத்தனமாக உள்ளது. பன்னாட்டு நிறுவன மேம்பாட்டுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

விவசாயத்துக்கும், நெசவு தொழிலுக்கும் மின்சாரம் அத்தியாவசியமான ஒன்று. ஆனால், அடிக்கடி அறிவிக்கப்படாத மின் வெட்டால் விவசாயமும், நெசவு தொழிலும் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகிறது. போதிய தண்ணீர் பற்றாக்குறையாலும் விவசாயம் மேற்கொள்ள முடியாமல் விவசாயிகள் பரிதவிக்கின்றனர். இப்பிரச்னைகளுக்கு தீர்வு காண ஒரே வழி தமிழகத்தில் ஆட்சி மாற்றம் வரவேண்டும். அப்போதுதான் விவசாயிகளும், நெசவு தொழிலாளர்களும் வாழ்க்கையில் ஏற்றம் பெற மாற்றம் அவசியம் தேவை. இவ்வாறு அவர் பேசினார்.மாவட்டச் செயலாளர் தங்கமணி, எம்.பி., அன்பழகன், மாவட்ட பொருளாளர் காந்தி முருகேசன், எம்.எல்.ஏ., ரவிச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில், ஒன்றிய செயலாளர் கந்தசாமி, நகர செயலாளர் வெள்ளியங்கிரி, குமாரபாளையம் சட்டசபை தொகுதி செயலாளர் சுப்ரமணி ஆகியோர் பங்கேற்றனர். பொதுக்குழு உறுப்பினர் சந்திரசேகரன், ஜெ., பேரவை செயலாளர் செந்தில், துணை செயலாளர் திருமூர்த்தி, நகர அவைத்தலைவர் சுப்பையன், துணை செயலாளர்

ஜெய்கணேஷ், மாவட்ட எம்.ஜி.ஆர்., மன்ற இணைச் செயலாளர் முகிலன், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக, சார்பு மன்ற நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்பட 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### புவி வெப்பத்தை மரங்களால் மட்டுமே தடுக்க முடியும்

ஊட்டி: "புவி வெப்பமடைவதை மரங்களால் தான் தடுக்க முடியும்,' என சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாமில் தெரிவிக்கப்பட்டது. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் சார்பில் தேசிய சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம் நடத்தப்படுகிறது.

நீலகிரி சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார அறக்கட்டளை (நெஸ்ட்) சார்பில், ஊட்டி ஆக்ஸ்போர்ட் ஆசிரியர் பயிற்சி மையத்தில் நேற்று நடந்த சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாமில் நகராட்சி தலைவர் ராஜேந்திரன் பேசுகையில்,""புவி வெப்பமடைவதற்கு கரியமில வாயு வெளியேற்றம் காரணமாகும். இதற்கு முக்கிய காரணம் வாகன புகை வெளியேறுதல். எனவே மக்கள் கூடிய வரை பொதுவான போக்குவரத்தை பயன்படுத்த வேண்டும். மேலும் வாரத்துக்கு ஒரு முறை தங்கள் வாகனங்களை நிறுத்தி பஸ்கள் மற்றும் பொது போக்குவரத்தை பயன்படுத்தினால் 50 சதவீத கரியமில வாயு வெளியேற்றத்தை தவிர்க்கலாம்," என்றார். நீலகிரி வடக்கு வனக்கோட்ட வன அலுவலர் சவுந்திரபாண்டியன் பேசியதாவது; சுற்றுச்சூழல் பாதிப்பால் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்துள்ளது. அறிவியல் வளர்ச்சி காரணமாக பின் விளைவுகளும் ஏராளமாக ஏற்பட்டுள்ளது. இதில் முக்கியமானது கரியமில வாயு வெளியேற்றம். மரங்களால் தான் இதனை கட்டுபடுத்த முடியும். இதன் காரணமாக, வனப்பரப்பை பாதுகாக்க வேண்டும். வனப்பரப்பின் அடர்த்தியை குறையாமல் பாதுகாக்க வேண்டும்.

வனத்துறை மூலம் ஆண்டுதோறும் பல்வேறு திட்டங்களின் கீழ் மரங்கள் நடவு செய்யப்படுகின்றன. நீலகிரியில் வனங்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது வனத்தீயாகும். வனத்தீ ஏற்பட்டால் இருக்கிற மரங்கள் எரிந்து விடுவது மட்டுமில்லாமல், புதியதாக வளர்த்துள்ள மர கன்றுகளும் எரிந்து நாசமாகி விடுகின்றன. மரங்கள் நடவு செய்ய விரும்புபவர்களுக்கு வனத்துறை மூலம் மரக்கன்றுகள் இலவசமாக வினியோகிக்க வனத்துறை தயாராக உள்ளது. மரக்கன்றுகளை நடவு செய்து அவற்றை பாதுகாக்க வேண்டும். சுற்றுச்சூழல் குறித்து ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் நோக்கம், அவர்களால் ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு தாங்கள் கற்றதை தெரிவிக்க முடியும். இதனால் மாணவர்கள் மத்தியில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஆழமாக பதியும். மாணவர்களை சோலை மரக்கனறுகளை நடவு செய்ய வலியுறுத்த வேண்டும். இவ்வாறு சவுந்திரபாண்டியன் பேசினார்.

முகாமில் வடக்கு வனக்கோட்ட உதவி வனப்பாதுகாவலர் ஜெயராஜ், சி.பி.ஆர்., சுற்றுச்சூழல் கல்வி மைய கள இயக்குனர் குமரவேலு, நகர விழிப்புணர்வு சங்க செயலாளர் ஜனார்தனன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நீலகிரி சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார அறக்கட்டளை நிர்வாகி சிவதாஸ் செய்திருந்தார்.

### விவசாயிகளிடமிருந்து நேரடி நெல்கொள்முதல் : டெல்டா பகுதி புதுகை விவசாயிகள் எதிர்பார்ப்பு

புதுக்கோட்டை: "புதுக்கோட்டை மாவட்டத்தில் நெல் அறுவடை துவங்கியுள்ள நிலையில் 300 மூடைகளுக்கு மேல் நெல் உற்பத்தி செய்த விவசாயகளிடம் இருந்து நேரடியாக  கொள்முதல் செய்ய நெல் கொள்முதல் நிலையங்கள்

முன்வர வேண்டும்' என டெல்டா பகுதி விவசாயிகள் விரும்புகின்றனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் இந்தாண்டு கிட்டத்தட்ட 87 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் சம்பா நெல் சாகுபடி நடந்துள்ளது.

டெல்டா பகுதிகளில் மட்டும் 60 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் இந்தாண்டு எதிர்பார்த்ததை விட மழைபொழிவு குறைவு என்றாலும் கதிர் பருவத்தில் ஓரளவு மழை பெய்ததால் விவசாயிகள் அனைவரும் சம்பா நெல் சாகுபடியை வெற்றிகரமாக முடித்துள்ளனர். இதுபோன்று கல்லணைக் கால்வாயிலும் தட்டுப்பாடின்றி தண்ணீர் திறந்துவிடப்பட்டதால் டெல்டா பகுதி விவசாயிகளும் சம்பாநெல் சாகுபடியை முழுவீச்சில் முடித்துள்ளனர். மாவட்டத்தில் தற்போது நெல் அறுவடை துவங்கியுள்ள நிலையில் விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்ய ஏதுவாக மாவட்டம் முழுவதும் இதுவரை 56 நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. டெல்டா பகுதிகளான அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி பஞ்சாயத்து யூனியன் பகுதிகளில் மட்டும் 42 நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் விவசாயிகளிடமிருந்து குவிண்டால் ஒன்றுக்கு சன்னரகம் 1,100 ரூபாய், மோட்டோ ரகம் 1,050 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டு நெல் கொள்முதல் செய்யப்படுகிறது.இதற்கிடையே மாவட்டம் முழுவதும் கடும் பனிப்பொழிவு நீடித்துவரும் நிலையில் அறுவடை துவங்கியுள்ளதால் நெல் 20 சதவீதம் வரை ஈரப்பதத்துடன் உள்ளது. இவற்றை இரண்டு முதல் நான்கு நாட்கள் வரை வெயிலில் நன்கு காயவைத்த பின்னரே மூடைகட்டி கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு செல்லவேண்டிய கட்டாய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

நெல் மணிகளை தொடர்ந்து காயவைப்பதால் ஏற்படும் இழப்பு மற்றும் சிரமத்தை தவிர்க்கும் விதமாக 18 சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லையும் கொள்முதல் செய்ய நெல் கொள்முதல் நிலையங்களுக்கு உத்தரவிடவேண்டும் என மாவட்ட நிர்வாகத்துக்கு அம்மாவட்ட விவசாயிகள் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்தனர்.இருந்தும் 16 சதவீதம் வரையிலான ஈரப்பதம் கொண்ட நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்டதை விட அதிக ஈரப்பதம் கொண்ட நெல் மூடைகளை கொள்முதல் செய்ய மறுத்து திருப்பி அனுப்பப்படுவதால் விவசாயிகள் பலர் ஏமாற்றமடைந்துள்ளனர். இதுபோன்று 300 மூடைகளுக்கு மேல் நெல் உற்பத்தி செய்துள்ள விவசாயிகள் கொள்முதல் நிலையங்களுக்கு அலைந்து திரிவதை தவிர்க்கும் விதமாக அவர்களிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யவேண்டும் என விவசாயிகள் விரும்புகின்றனர்.

இதுகுறித்து அறந்தாங்கி அடுத்த அத்தாணி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ராமசாமி கூறியதாவது: புதுக்கோட்டை மாவட்டத்தில் நெல் அறுவடை துவங்கியுள்ள நிலையில் பனிப்பொழிவு நீடிப்பதால் அறுவடை செய்யும் நெல் 18 முதல் 20 சதவீதம் வரை ஈரப்பதமாக உள்ளது. இவற்றை நான்கு நாட்கள் வரை வெயிலில் நன்கு காயவைத்த பின்னரே கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு செல்லவேண்டிய கட்டாய நிலை உள்ளது. இவை விவசாயிகளுக்கு பலத்த இழப்பையும், சிரமத்தையும் ஏற்படுத்துகிறது. இதை தவிர்க்கும் விதமாக 18 சதவீதம் வரை ஈரப்பதம் கொண்ட நெல்லையும் கொள்முதல் செய்யவேண்டும். 300 மூடைகளுக்கு மேல் நெல் அறுவடை செய்துள்ள விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யவேண்டும் என ஏற்கனவே அரசு உத்தரவிட்டுள்ளது. இதே நடைமுறை தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் பின்பற்றப்பட்டு வருகிறது. இதுபோன்று புதுக்கோட்டை மாவட்டத்திலும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யவேண்டும். விவசாயிகளிடமிருந்து சரியான எடையில் நெல் கொள்முதல் செய்யவேண்டும்.இவ்வாறு அவர் கூறினார்.

### பழமரக்கன்றுகள் விற்பனை

தேனி:பெரியகுளம் அரசு தோட்டக்கலை பண்ணையில் மா, நெல்லி, கொய்யா, மாதுளை போன்ற பழவகை மரக் கன்றுகள் விற்பனைக்கு தயாராக உள்ளன. ஏற்றுமதி தரத்திலான அல்போன்சா, பங்கனப்பள்ளி போன்றவை கன்று 25 ரூபாய்க்கும், நெல்லியில் என்.ஏ-7., காஞ்சன் ஆகிய ரகங்கள் 25க்கும், எல்-49 கொய்யா, கணேஷ் ரக மாதுளை கன்றுகள் 12 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுவதாக, தோட்டக்கலை துணை இயக்குனர் கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

### மூலிகை சாகுபடி தீவிரம்

கம்பம் : மூலிகை சாகுபடியை அதிகரிக்க தோட்டக்கலைத்துறையினர் தீவிரம் காட்டி வருகின்றனர்.மருத்துவத்தில் மூலிகைகள் பயன்பாடு அதிகரித்து வருகிறது. ஆங்கில முறை வைத்தியம் உடனடி பலன் தரும் என்ற போதிலும், மூலிகை மருத்துவத்தில் நிரந்தரமாக தீர்வு கிடைப்பதுடன், பக்க விளைவுகள் இருக்காது என்பதால் மூலிகை பயன்பாடு அதிகரித்து வருகிறது. பெரும்பாலான மூலிகைகள் வனப்பகுதியில் இருந்து தான் பறிக்கப்படுகிறது.

இதனால் பல அரிய வகை மூலிகைகள் அழிந்து வருகிறது. எனவே மூலிகைகளை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் பல உதவிகளை செய்து வருகிறது. பல மானிய திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது. சாகுபடி செய்யும் மூலிகைகளை கொள்முதல் செய்யவும் அரசு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. தோட்டக்கலைத்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,"" நாட்டில் மூலிகை தேவை 3.20 லட்சம் டன்னாக உள்ளது. உலக மார்க்கெட்டில் மூலிகை வர்த்தகம் 3 ஆயிரம் கோடிக்கு மேல் நடக்கிறது. இந்தியாவில் இருந்து ஆயிரத்து 250 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தமிழகத்தில் அதிக பரப்பில் மூலிகை சாகுபடி செய்ய திட்டமிடப்பட் டுள்ளது. தோட்டக்கலைத் துறை அதற்கான பணிகளில் இறங்கியுள்ளது,'' என்றார்.

### சீவநல்லூரில் தரமானவிதை உற்பத்தி பயிற்சி

தென்காசி:சீவநல்லூரில் தரமான விதை உற்பத்தி பயிற்சி நடந்தது.செங்கோட்டை அருகே இலத்தூர் சீவநல்லூரில் விதை கிராம திட்டத்தின் கீழ் தரமான விதை உற்பத்தி பயிற்சி எண்ணெய் வித்து பயிரில் இரண்டாம் கட்டம் மற்றும் மூன்றாம் கட்ட பயிற்சி நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் வெங்கடகிருஷ்ணன் தலைமை வகித்து எண்ணெய் வித்து உற்பத்தி பெருக்கிடும் வழிமுறைகள் குறித்தும், ஈரபதமானி பயன்படுத்தும் முறை, நெல் விதை எவ்வாறு சான்று அட்டை பொருத்தப்படுகிறது என்பது குறித்தும் விளக்கினார்.துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் எண்ணெய் வித்து பயிர்களை தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்கள் கட்டுப்படுத்தும் முறைகள், எண்ணெய் வித்து பயிர் சேமிக்கும் முறைகள் குறித்து பேசினார்.

அனந்தபுரம் விலக்கில் உள்ள சுப்பையா விதை சுத்தி நிலையத்திற்கும், வயல் வெளிகளுக்கும் விவசாயிகள் அழைத்து செல்லப்பட்டனர். பயிரில் கலவன் நீக்கும் முறை, விலகு தூரம், என்னென்ன கலவன்கர் வர வாய்ப்பு உள்ளது. அதை எவ்வாறு நீக்குவது. விதை சுத்தம் செய்யும் முறை, கலவன்கள் இயந்திரத்தின் மூலம் நீக்கும் முறை, கழிவு விதைகள் வெளியேற்றப்படும் முறை குறித்து விதை சான்று அலுவலர் அசோகன் விளக்கினார்.ஏற்பாடுகளை சாம்பவர்வடகரை வேளாண்மை உதவி அலுவலர் கண்ணன் செய்திருந்தார்.

## செலந்தம்பள்ளியில்கோதுமை வயல் விழா

திருப்பத்தூர்:திருப்பத்தூர் அடுத்த செலந்தம்பள்ளி கிராமத்தில் வேலூர் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் கோதுமை வயல் விழா நடந்தது.நிகழ்ச்சிக்கு திருப்பத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் காந்தி தலைமை வகித்தார். இந்திய வேளாண் ஆராய்ச்சி நிலையம் ஊட்டியில் இருந்து டாக்டர்கள் ஜெகதீஸ்குமார், சிவசாமி ஆகியோர் கலந்து கொண்டு கோதுமை சாகுபடி தொழில் நுட்பம் குறித்து விளக்கி பேசினர்.ஆத்மா திட்ட தொழில்நுட்ப அலுவலர் கணேஷ்குமார் மற்றும் விவசாயிகள் சக்திவேல், ராஜாமணி உள்ளிட்ட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

## அறுவடைக்குப்பின் செய்நேர்த்திபணிமனை கூட்டத்தில் விளக்கம்

குடியாத்தம்:குடியாத்தம் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில் நீர்வள, நிலவளத் திட்டம், கவுண்டன்ய நதி உபவடி நிலப்பகுதி சார்ந்த விவசாய பொருட்கள் வாங்குவோர், விற்போருக்கான பணிமனை கூட்டம் குடியாத்தத்தில் நடந்தது.வேலூர் வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார். குடியாத்தம் வட்டார வேளாண் வணிக உதவி அலுவலர் ஜெயபாலன் வரவேற்றார். வேளாண்மை அலுவலர் சோமு விவசாய விளைபொருள் உற்பத்தியாளர் குழுக்கள் அமைத்தல், நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து விளக்கமளித்தார். குடியாத்தம் வேளாண் அலுவலர் தேன்மொழி விளைபொருள் உற்பத்தி செய்வது, மேம்படுத்தி விற்பனை செய்வது குறித்து பேசினார்.

வேலூர் வேளாண் அலுவலர் சத்தியபிரகாஷ் அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி, தொழில்நுட்பம் மற்றும் வேளாண் வணிக மைய செயல்பாடுகள் குறித்து பேசினார். மேலாலத்தூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய வேளாண்மை பல்கலைக்கழக உதவி பேராசிரியர் சத்யா நீர்வள, நிலவளத்திட்டம், வேளாண்மை பல்கலைகழகத்தின் செயல்பாடுகள் குறித்து பேசினார்.குடியாத்தம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் பர்வதம்மா நீர்வள, நிலவள திட்டத்தின் மூலம் தோட்டக்கலையில் செயல்பாடுகள் குறித்தும், மானிய விவரங்கள் குறித்தும் விளக்கி பேசினார். இதில் கே.வி.குப்பம், காட்பாடி, வேலூர், அணைக்கட்டு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.ஏற்பாடுகளை வேளாண் வணிக உதவி வேளாண்மை அலுவலர்கள் ஜெயபாலன், சம்பத், நாகராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

## மணிலாவிற்கு மானியத்தில் ஜிப்சம்:விவசாயிகளுக்கு அதிகாரி அழைப்பு

திருப்பத்தூர்:மணிலா பயிருக்கு மானியத்தில் ஜிப்சம் வாங்கி விவசாயிகள் பயன்பெற வேண்டுமென வேளாண் உதவி இயக்குனர் அழைப்பு விடுத்துள்ளார். திருப்பத்தூர் அடுத்த கந்திலி வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) கே.சி.ராகினி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: இரவை மார்கழி பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்ட மணிலா தற்போது பூக்கும் தருணத்தில் உள்ளது. இந்த சமயத்தில் ஜிப்சம் இடுவதால் நல்ல மகசூல் பெற முடியும். கால்சியம் மற்றும் கந்தக குறைபாடுள்ள நிலங்களில் ஜிப்சம் இட்டால் நல்ல பயனை தரும். ஒரு எக்டருக்கு 400 கிலோ வீதம் விதைத்த 40 முதல் 45வது நாளில் பாசன பயிருக்கும், 40 முதல் 75வது நாளில் மானாவாரி பயிருக்கும் செடிகளின் ஓரமாக மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து ஜிப்சம் இட வேண்டும். மண்ணை கொத்தி ஜிப்சம் இட்டு ஒன்று சேர்த்து மண்ணை அணைக்க வேண்டும். ஜிப்சம் அதிக காய்கள் உருவாகுவதை தூண்டுகிறது. இரவையில் மணிலா சாகுபடி செய்துள்ள விவசாயிகள் ஜிப்சத்தை மானியத்தில் பெற்று மணிலாவிற்கு இட்டு மகசூலை பெருக்க வேண்டும். ஐசோபாம் எண்ணெய் வித்து திட்டத்தின் மூலம் மானியத்தில் ஜிப்சத்தை கந்திலி வட்டார வேளாண்மை விரிவாக்கத்திற்கு வந்து பெற்று செல்லலாம்.இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## காட்பாடி விவசாயிகளுக்குமக்காச்சோள சாகுபடி பயிற்சி

குடியாத்தம்: காட்பாடி பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கான மக்காச்சோளம் சாகுபடி குறித்த ஒரு நாள் சிறப்பு பயிற்சி முகாம் தளையாரம்பட்டு கிராமத்தில் நடந்தது.குடியாத்தம் அடுத்த மேலாலத்துர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் கரும்பு ஆராய்ச்சி நிலையம் சார்பில் நடந்த பயிற்சி முகாமிற்கு தளையாரம்பட்டு ஏரிநீர் பாசன சங்கத்தலைவர் சாந்தகுமார் தலைமை வகித்தார். ஒலையாத்தூர் ஏரிநீர் பாசன சங்கத்தலைவர் பிரகாசம் முன்னிலை வகித்தார். கரும்பு ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் சத்யா மக்காச்சோள சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்தும், நீர்வள, நிலவள திட்டம் மூலம் செயல்படுத்தி வரும் திட்டங்கள் குறித்தும் பேசினார்.உதவி பேராசிரியர் சுதாகர் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ற மக்காச்சோள பயிர் ரகங்கள் மற்றும் விதை உற்பத்தி குறித்து பேசினார்.

பையூர் மண்டல ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் பரசுராமன் மக்காச்சோள பயிர்களுக்கு உரமிடுதல், சந்தைப்படுத்துதல், சொட்டு நீர்பாசனம் அமைத்தல் மற்றும் அதன் பயன்கள் குறித்து விளக்கம் அளித்தார். உதவி பேராசிரியை சுந்தரவதனா மக்காச்சோளத்தில் ஏற்படும் நோய்களும் அவற்றை நிவர்த்தி செய்யும் முறைகள் குறித்தும் விளக்கமளித்தார். முகாமில் சேனூர், தளையாரம்பட்டு, உண்ணாமலைசமுத்திரம், திருமணி மற்றும் ஒலையாத்தூர் பகுதியை சேர்ந்த 70க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.நீர்வள, நிலவள திட்ட முதுநிலை ஆராய்ச்சியாளர் மாரியப்பன் நன்றி கூறினார்.

## பென்னகர் கிராமத்தில்உழவர் வயல்வெளி பயிற்சி

கலவை:கலவை அடுத்த பென்னகர் கிராமத்தில் விவசாயிகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உழவர் வயல்வெளி பயிற்சி நடந்தது.பயிற்சிக்கு ஊராட்சி மன்றத்தலைவர் வெங்கடேசன் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குனர் முகமது அஸ்லாம், வேளாண்மை அலுவலர் லதா, உதவி வேளாண்மை அலுவலர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

பயிற்சியில் துவரை, பச்சை பயிறு, உளுந்து, காராமணி ஆகிய பயிறு வகைகளை உற்பத்தி அதிகரிக்க செய்யும் வழிமுறைகளையும் புதிய சாகுபடி தொழிற்நுட்பங்கள் பற்றியும், விதை நேர்த்தி செயல் விளக்கம் மற்றும் டி.ஏ.பி இரண்டரை கிலோ, அம்மோனிய சல்பேட் 1 கிலோ, போரக்கஸ் 500 கிராம், பிளானோபிக்ஸ் 350 எம்ஜ ஆகிய கரைசலை ஒரு ஹெக்டருக்கு 2 முறை பூ எடுக்கும் தருணத்தில் தெளிப்பதன் மூலம் காய் பிடிக்கும் திறன் அதிகரிக்கும்.பூக்கள் மற்றும் காய்கள் உதிர்வதை தடுக்கும் முறையும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பற்றியும் அறிவுரை வழங்கப்பட்டது. பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு அதிக மகசூல் பெறும் தொழில்நுட்பங்களை தெரிந்து பயனடைந்தனர்.

## கீழ்கொத்தூர் விவசாயிகளுக்குவிதை கிராம திட்டப் பயிற்சி

அணைக்கட்டு:ஒடுகத்தூர் பகுதியில் கீழ்கொத்தூர், பின்னத்துரை மற்றும் அதன் சுற்று கிராம பகுதி விவசாயிகளுக்கு அணைக்கட்டு வட்டார வேளாண்மை துறை சார்பில் விதை கிராம திட்டப் பயிற்சி வழங்கப்பட்டது.நிகழ்ச்சிக்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சிவக்குமார் சிங் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் முருகன் முன்னிலை வகித்தார். துணை வேளாண்மை அலுவலர் ரங்கநாதன் வரவேற்றார்.உதவி வேளாண்மை அலுவலர்கள் காண்டீபன், ஜெயபால், வையாபுரி, மகாலிங்கம் ஆகியோர் பயிற்சியளித்தனர்.அப்போது நெல் மற்றும் பயிர் வகைகளில் தரமான விதை உற்பத்தி செய்வது குறித்து தொழில் நுட்பங்கள் பற்றியும், உயிர் உரங்களின் பயன்பாடுகள், அவற்றால் ஏற்படும் நன்மைகள் பற்றியும், மேலும் செம்மை நெல் சாகுபடி குறித்தும் செயல்முறைகளுடன் விளக்கப்பட்டது.பயிற்சியில் கீழ்கொத்தூர் பகுதி கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர்.

### விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி செய்து அதிக பயன்பெறலாம்: கலெக்டர் வேண்டுகோள்

உளுந்தூர்பேட்டை: விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி செய்து அதிக பயன்பெறவேண் டும் கலெக்டர் பழனிசாமி கேட்டுக்கொண்டார். உளுந்தூர்பேட்டை அடுத்த நாச்சியார் பேட் டையில் கலெக்டர் தலைமையில் மனுநீதி நாள் முகாம் நடந்தது. ஊராட்சி தலைவர் மண்ணாங்கட்டி வரவேற்றார்.

திருநாவுக்கரசு எம்.எல்.ஏ., முன் னிலை வகித்தார். திருக் கோவிலூர் ஆர்.டி.ஓ., ராஜேந்திரன், துணை கலெக்டர் சேஷாத்திரி, தனி தாசில் தார் வேலாயுதம் பிள்ளை, துணை தாசில்தார் பொன் னுசாமி, பி.டி.ஓ., கணேசன், வருவாய் அலுவலர் சற்குணன், தி.மு.க., ஒன் றிய செயலாளர் வசந்தவேல் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் வீட்டுமனை பட்டா 56 பேருக் கும், முதியோர் உதவித் தொகை உத்தரவு 25 பேருக் கும், வேளாண்மை துறை சார்பில் விசைத்தெளிப் பான் 9 பேருக்கும், ஆதி திராவிட நலத்துறை சார் பில் ஒரு தையல் இயந்திரத் தையும் கலெக்டர் பழனிசாமி வழங்கினார், பொதுமக்களிடமிருந்து 404 மனுக் கள் பெறப்பட்டது. தாசில் தார் சிவஞானம் நன்றி கூறினார். முகாமில் கலெக்டர் பழனிசாமி பேசியதாவது:

பொதுமக்கள் எந்தவித செலவும் இல்லாமல் விழுப் புரம் கலெக்டர் அலுவகத்தில் 1070 என்ற தொலைபேசி எண்ணிற்கு ங்களது குறைகளை தெரிவித்தால் 10 தினங்களுக் குள் நடவடிக்கை எடுக்கப் படும். 10 தினங்கள் கழித்து மீண்டும் பேசினால் எடுக் கப்பட்ட நடவடிக்கை குறித்து தெரிவிக்கப்படும். தமிழக அரசு செயல் படுத்தியுள்ள நலத்திட் டங்களை பொதுமக்கள் முழுமையாக பயன் படுத்திக் கொள் ளவேண் டும். விவசாயிகள் செம்மை நெல் சாகுபடி செய்து அதிக பயன்பெற வேண் டும். கிராமத்தில் உள்ள அனைத்து குழந்தைகளையும் பெற் றோர்கள் பள் ளிக்கு அனுப்பவேண்டும் என கலெக்டர் பழனிசாமி பேசினார்.

### தர்பூசணி விலை வீழ்ச்சி விவசாயிகள் கவலை

திண்டிவனம்: திண்டிவனம் பகுதி யில் தர்பூசணி விலை குறைந்துள்ளதால் விவசா யிகள் கவலையடைந் துள்ளனர். திண்டிவனம் தாலுகா வில் உள்ள ஊரல், முருக் கேரி மற்றும் சூனாம் பேடு உள்ளிட்ட கிராமங் களில் 12 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தர்பூசணி சாகுபடி செய்யப்பட் டுள்ளது. இதன் அறு வடை ஜனவரி 20 ம் தேதி துவங்கி நடந்து வருகி றது. ஆரம்பத்தில் டன் ஒன்று 3,800 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்பட் டது. தற்போது 2,700 ரூபாயாக விலை குறைந்து விட்டது. ஒரே நேரத்தில் அதிகளவில் அறுவடை, தேவை குறைவு மற்றும் இடைத் தரகர்கள் தலையீடும் தான், விலை வீச்சிக்கு காரணம் என விவசா யிகள் தெரிவிக்கின்றனர். இப் பிரச்னையை தீர்க்க குளிரூட்டப்பட்ட கிடங்கு வசதி திண்டிவ னம் பகுதியில் அரசு சார் பில் அமைக்க வேண்டு மென விவசாயிகள் கூறினர்.

### விவசாயிகளுக்கு நுகர்வோர் பயிற்சி

விருதுநகர் : விருதுநகர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு நுகர்வோர் குறித்து பயிற்சி வழங்கப்பட்டது.விருதுநகர் மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு உணவுப்பொருள் வழங்கல் துறை சார்பில் விவசாயிகளும் நுகர்வோர்கள் தான் அவர்கள் விதைகள், உரங்கள், இடு பொருள்கள் வாங்கும் போது என்ன கடைபிடிக்க வேண்டும். பொருள்கள் வாங்கியதில் நஷ்டம் ஏற்பட்டால் எப்படி நுகர்வோர் குறை தீர் மன்றத்தை அணுகலாம். பரிகாரத்திற்குஉரிய புகார்கள் விபரங்கள், விவசாயிகள் பாதுகாப்பு குறித்து சட்டங்கள் போன்ற விழிப்புணர்வு பயிற்சி வழங்கப்பட்டது. இதில் பிப். 18, 25 ஆகிய தேதிகளில் இந்த பயிற்சி தொடர்ந்து வழங்கப்படவுள்ளது. இதில், மாவட்ட வழங்கல் அலுவலர் கொம்பையன், விவசாய துணை இயக்குனர். விதைகள் துறை இணை இயக்குனர் உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர். பயிற்சி பெற்ற விவசாயிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

### விதைப்பண்ணையில் உதவி இயக்குநர் ஆய்வு

நரிக்குடி:நரிக்குடி அருகே மறைக்குளம், இசலி கிராமங்களில் தேசிய விதைக் கழகத்தின் மூலம் 88 எக்டரில் கடலை டி.எம்.வி.2 ரக சான்று நிலை விதைப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இதனை விதைச்சான்று உதவி இயக்குனர் நாராயணபிரசாத் ஆய்வு செய்தார்.

பயிர் எண்ணிக்கை பராமரித்தலின் அவசியம் குறித்தும், கடலை விதைப்பண்ணையினைத் தாக்கும் சுருள் பூச்சி, சிகப்பு கம்பளிப்புழு இவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்தும் எக்கப்பட்டது. தேசிய விதைக் கழகத்தின் விதை ஆய்வாளர் விஜயகுமார், விதைச்சான்று அலுவலர்கள் ரவி, சுமதி உடனிருந்தனர்.

### ஒரு கிலோ தக்காளி 6 ரூபாய்!

திருப்பூர்: திருப்பூர் வடக்கு உழவர் சந்தையில் ஒரு கிலோ தக்காளி நேற்று ஆறு ரூபாய்க்கு விற்கப்பட்டது. வடக்கு உழவர் சந்தைக்கு பெருமாநல்லூர், நம்பியூர், அவிநாசி, தெக்கலூர், ஊத்துக்குளி பகுதிகளில் இருந்து, ஐந்து பஸ்களில் காய்கறிகள் வருகின்றன. சந்தைக்கு வரும் காற்கறிகள் முழுமையாக விற்றுத் தீர்கின்றன. கீரை வகை மற்றும் கொத்தமல்லி மட்டுமே மீதமாகின்றன.

அவை, குளிர்சாதன அறையில் பாதுகாக்கப் படுகின்றன; 600 முதல் 700 கிலோ வரையிலான மல்லி, கறிவேப்பிலை, கீரை வகைகள் இருப்பு வைக்கப்படுகின்றன. நேற்று, கத்தரிக்காய் கிலோ 16 ரூபாய்; தக்காளி 6; வெண்டை 14; புடலை 10,12; பாகல் 15; பீர்க்கன்காய் 22; சுரைக்காய் 8; கொத்தவரை 13; பச்சை மிளகாய் 20; சம்பா 16; பட்டை அவரை 14, பெல்ட் அவரை 16, டிஸ்கோ 18; முள்ளங்கி 8; சிவப்பு முள்ளங்கி 12; தேங்காய் 10; வாழைக்காய் 15; கீரை வகைகள் 15; கறிவேப்பிலை 25 ரூபாய் என விற்பனையானது. மரவெள்ளி கிழங்கு 7 ரூபாய்; பெரிய வெங்காயம் 18; சின்ன வெங்காயம் 12 முதல் 18 வரை; உருளை 16; கேரட் 20 முதல் 25 வரை; பீட்ரூட் 15; சேனை 18; முருங்கை 40; பீன்ஸ் 22; புஸ் பீன்ஸ் 25; கோஸ் 8 முதல் 10 வரை; காலிபிளவர் 12; மேரக்காய் 12; இஞ்சி 35 முதல் 40 வரை; பூண்டு 90; எலுமிச்சை 35; புளி 40; பொரியல் தட்டை 14 ரூபாய் என விற்கப்பட்டது.

தென்னம்பாளையம் காய்கறி மார்க்கெட்டுக்கு நேற்று தர்பூசணி வரத்து அதிகமாக இருந்தது. பொங்கலூர், பல்லடம் பகுதிகளில் இருந்து 12 டன் அளவுக்கு தர்பூசணி பழங்கள் விற்பனைக்கு வந்திருந்தன. வெளிமார்க்கெட்டில் கிலோ 7 முதல் 8 ரூபாய் வரை விற்கப்படுகிறது. நேற்று வரத்து அதிகமாக இருந்ததால், கிலோ 3 முதல் 5 ரூபாய் வரை விற்றது. தள்ளுவண்டிகளில் "பீஸ்' போட்டு விற்பதில், எவ்வித விலை குறைவும் ஏற்படவில்லை.

### பால் கறவை இயந்திரம்

பிப்ரவரி 23,2010,19:28 IST



கறவை இயந்திரத்தினால் பால் கறப்பதன் மூலம் பாலினை மிகவும் தூய்மையானதாகவும் பாதுகாப்பு நிறைந்ததாகவும் செய்வதோடு மட்டுமின்றி மிக குறைந்த நேரத்தில் அதிகப் படியான மாடுகளிலிருந்து பால் கறக்கவும் வழி வகை செய்கிறது. கறவை இயந்திரம் மூலம் பால் கறக்கும்போது இயந்திரமானது காம்பினுள் அதிகநேரம் இருக்குமேயானால் காம்பிலிருந்து ரத்தம் வந்துவிடுமோ என்ற அச்சம் மக்களிடையே நிலவுகின்றது.

இது கறவை இயந்திரம் பற்றிய தவறான கருத்தாகும். ஏனெனில் கன்று குட்டிகள் காம்புகளில் பால் உறிஞ்சும்போது 535 மி.மீ. பாதரச அழுத்தத்தை உருவாக்கி பாலை அருந்துகின்றன. மேலும் கைகளினால் பால் கறக்கும்போது கறவையாளர்கள் சுமார் 310 மி.மீ. பாதரச அழுத்ததை உருவாக்கி பாலை கறக்கின்றனர். அதேபோன்று கறவை இயந்திரத்தின் மூலம் பாலை கறக்கும்போது 350-400 மி.மீ. பாதரச அழுத்ததை உருவாக்கி பால் கறக்கலாம்.

ஆகவே மேற்சொன்ன முறையின் படி பார்க்கும்போது கன்றுகுட்டிகள் பால் குடிக்கும்போது ஏற்படும் அழுத்தத்தைவிட கறவை இயந்திரத்தினால் மடியினுள் ஏற்படும் அழுத்தம் மிக குறைவாக இருப்பதால் கறவை இயந்திரத்தினால் காம்புகளில் ரத்தம் வரும் என்ற பேச்சுக்கே இட மில்லாமல் போய்விடுகின்றது.

உங்களுடைய கறவை இயந்தி ரம் மாடுகளுக்கு சவுகரியமானதாகவும் பாலைமுழுவதும் கறக்கக் கூடியதாகவும் இருக்கிறதா?: முதன்முதலில் பால் கறக்க கொட்டிலுக்கு வரும்பொழுது மாடுகளுக்கு பழக்கம் இருக்காது. எனவே அதற்கு பழக்கப்படுத்த வேண்டும்.

அப்பொழுது கறவை இயந்திரத்தை சவுகரியமாகவும் அழுத்தம் குறைவாக இருக்குமாறும் பார்த்துக்கொள்ள வேண்டும். முதலில் காம்பில் பொருத்தப்படும் கறவை இயந்திரத்தின் கப் நன்றாக இயங்கும் நிலையில் இருக்க வேண்டும். அத்துடன் காம்பு திசுக்களில் காயம் ஏற்படுத்தாமலும் பாலை வெளியேற்ற தேவையான அழுத்தம் கொடுக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இரண்டாவதாக கறவை இயந்திரம் நன்றாக சரிசெய்யப் பட்டுள்ளதா என்பதை

கண்காணிக்க வேண்டும். மேலும் கறவை இயந்திர கப்பானது இறுக்கமாகவும் புதியதாக கன்று ஈன்ற மாடுகளின் காம்பிற்கு தேவையான அளவு அழுத்தம் கொடுக்க கூடியதாகவும் உள்ளதா என்பதையும் கண்காணிக்க வேண்டும்.

மடிவீக்க நோயை கட்டுப் படுத்துவதில் முக்கியமானது கப் பொருத்துவதற்கு முன் காம்புகளை சுத்தமாக கழுவி ஈரப்பதம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். காம்பு பெரிதாகி காயங்களுடன் இருந்தால் பால் கறக்கும் இயந்திரத்தின் கப் சரியாக பொருந்தாமல் இருப்பதுடன் அடிக்கடி காம்பைவிட்டு கீழ் இறங்கிவிடும். அத்தகைய மாடுகளை பால்கறக்கும் பகுதிக்கு கொண்டுவந்து பாலை முழுவதும் கறந்துவிட வேண்டும்.

பல எண்ணிக்கையில் முதல் கன்று ஈன்ற மாடுகள் (கிடாரிகள்) இருக்கும்பொழுது பால் கறவை இயந்திர தொழில்நுட்பம் தெரிந்தவரிடம் ஆலோசித்து பால் கறக்கும்போது பால் இயந்திரத்திற்கு தேவைப்படும் மாற்றங்கள் செய்து மாடுகளுக்கு ஒரு சவுகரியமான நிலையை ஏற்படுத்தி தர வேண்டும்.

கறவை இயந்திரத்துடன் மாடு எவ்வளவு நேரம் இணைந்து இருக்கிறது என்பதை பொருத்து, காம்புகளில் இழப்பும் மடிவீக்கமும் இருக்கும். எனவே பாலை முழுவதும் கறப்பதுடன் கப்பை சீக்கிரமாகவும் நீக்கிவிட வேண்டும். காம்பிலிருந்து கப்பை அகற்றும் நேரம் கப்பின் இயக்கத்தை பொருத்தே இருக்கும். கப்பை சீக்கிரமாக பால் கீழ் இறங்குவதற்கு முன் இணைத்துவிட்டால், கப் நகர்ந்து மடியிலிருந்து காம்பிற்கு பால் வருவதை தடுக்கும்.

எனவே பால் கறக்க அதிக நேரம் எடுத்துக் கொள்ளும். ஒரே மாட்டில் அதிக பால் மற்றும் குறைந்த பால் கறப்பதற்கு இதுவும் ஒரு காரணம்ஆகும். பால் முழுவதுமாக கறவை இயந்திரத்தின் மூலம் கறக்கப்பட்டதா என்பதை தெரிந்துகொள்ள, பால் கறந்து முடிந்தவுடன் கையினால் கறந்து பார்க்க வேண்டும்.

அதன் அளவு 100 மிலிக்கு மேல் இருந்தால் பால் முழுவதுமாக கறக்கவில்லை என்றும் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.டாக்டர் த.முத்துராமலிங்கம், எம்.வி.எஸ்சி மற்றும் த.பிரகாஷ், எம்.வி.எஸ்சி.,ஆராய்ச்சி உதவியாளர்,கால்நடை பராமரிப்பு பிரிவு,தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவை-3.

**சின்னச்சின்ன செய்திகள்**

பிப்ரவரி 23,2010,19:26   IST



ஆட்டுப்பண்ணை: ஒரிஜினல் தளிசேரி ஆடுகள், பார்பரி, தோத்தாபுரி, கரோலி, பிலுலோடி போன்ற பல இன ஆடுகள் வாங்க தொடர்பு முகவரி: ""மலச்சி பண்ணைகள், கீரிப்பட்டி, ஆத்தூர்-636 107, சேலம். 93644 64433, 93602 70092. பண்ணையைப் பார்வையிட வருமுன் மொபைலில் தொடர்புகொண்டு உறுதிப்படுத்திக் கொண்டு செல்லவும்.



காலிபிளவர்: - சுகாசினி பிளஸ் - அனுபவ விவசாயி எம்.எஸ்.ஆர்.ராஜேந்திரன்(த/பெ.சாக்கன், மதகேரி கிராமம், ஜித்தாண்டபள்ளி அஞ்சல், பாலக்கோடு வட்டம், தர்மபுரி மாவட்டம், 99763 51047) 80-90 நாட்களில் 3/4 ஏக்கரில் சாகுபடி செய்து நிகர வருமானமாக 47 ஆயிரத்து 200 ரூபாய் பெற்றுள்ளார். தற்போது சமவெளியில் கூட இதைப் பயிர்செய்ய ஆரம்பித்துள்ளார். மேலும் விபரங்களுக்கு "பகுதி அலுவலர் செந்தில், ராயக்கோட்டை சின் ஜெண்டா, 98439 47491.



தமிழ்நாட்டில் எருமை வளர்ப்பு: நாட்டு எருமைகள் ஒரு லிட்டர், 2 லிட்டர் என்று குறைந்த அளவில்தான் பால் கொடுக்கும். எனவே அதிக பால் உற்பத்திக்கான கலப்பின பசுமாடுகள் பக்கம் ஆர்வம் ஏற்படவே எருமைமாடு வளர்ப்பு குறைந்துள்ளது. பசுமாட்டைப் போல கொட்டகையில்தான் வளர்க்க வேண்டும் என்பதில்லை. எருமைகளை மரத்தடியில்கூட வளர்க்கலாம். மழை வெயிலுக்கெல்லாம் எருமை அசையாமல் நிற்கும். முரா' என்று சொல்லப்படும் டெல்லி எருமை தினமும் 12 லிட்டர் வரை பால் கொடுக்கும் திறன் கொண்டது. இது தமிழ்நாட்டு சூழலுக்கு ஏற்ற ரகம். இதன் பூர்வீகம் அரியானா மாநிலமாகும். இந்த இன எருமைகளின் உறைவிந்து குச்சி ஒன்று 15 ரூபாய்க்கு தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டை அரசு கால்நடை பண்ணையில் விற்பனை செய்யப்படுகிறது. முரா இனத்தின் உறைவிந்துவை நம் பகுதிகளில் உள்ள நாட்டு எருமைக்கு செயற்கை முறையில் கருவூட்டம் செய்யலாம். இதன்மூலம் உருவாகும் கலப்பின எருமை தினமும் 6 லிட்டர் வரை பால் கொடுக்கும். அடுத்த தலைமுறையில் பால் உற்பத்தி அதிகரித்துக் கொண்டே செல்லும். (தொடர்புக்கு: அரசு கால்நடைபண்ணை, ஈச்சங்கோட்டை, 04372-244 844). - டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**நவீன தொழில்நுட்பம்: கறவை மாடுகளில் மலட்டுத்தன்மை**

பிப்ரவரி 23,2010,19:21 IST



கறவை மாடுகளைப் பராமரிக்கும் முறைகளில் செய்யப்படும் சிறு தவறுகளால் மலட்டுத்தன்மை உண்டாகி பால் உற்பத்தி குறைகிறது. கருத்தரிக்காமல் இருப்பதற்கு முக்கிய காரணங்கள் - சினைப் பருவத்தைக் கண்டறிந்து சரியான நேரத்தில் சினை ஊசி போடாதிருத்தல், சந்தேகத்திற்கு இடமான விந்தின் தரம்; தீவனப் பற்றாக்குறை மற்றும் இனவிருத்தி உறுப்புகளில் நோய். பொதுவாக பசுக்களும் எருமை மாடுகளும் வருடத்திற்கு ஒரு கன்று ஈன வேண்டும். இவ்வாறு கன்று பெறுவதற்கு மாடுகள் கன்ற ஈன்ற முதல் மாதக் கடைசியிலேயே மீண்டும் பருவத்திற்கு வரும். இந்த பருவத்தை தவறவிட்டால் மீண்டும் 2ம் மாத கடைசியில் அதாவது சுமார் 60வது நாள் பருவத்திற்கு வரும்பொழுது அவைகளை சினைக்கு விடவேண்டும். இதுவும் தவறினால் 3ம் மாதம் மீண்டும் சினைக்கு கத்தும்போது கண்டிப்பாக சினைக்கு விடவேண்டும். சினையாகி 9 மாதம் கழித்து அடுத்த கன்று ஈன்றுவிடும்.

கறவை மாடுகள் மீண்டும் கன்று ஈனும்பொழுது தேவையான சக்திகளைப் பெற்றுக்கொள்ள கறவை மாடுகளை பால் வற்றிய நிலையில் 60 நாட்கள் இருக்கச் செய்ய வேண்டும். இவ்வாறு செய்யும்போது மாடுகளில் மலட்டுத்தன்மை ஏற்பட வாய்ப்பில்லை. சுகாதாரமற்ற சூழ்நிலையில் கன்று ஈனும்பொழுது சரியாக கவனிக்காமல் இருந்தால் கர்ப்பப்பை பாதிக்கப்பட்டு மலட்டுத்தன்மை ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே கன்று போடுவதில் ஏதாவது கோளாறு ஏற்பட்டால் கால்நடை மருத்துவரின் உதவி பெற வேண்டும். பசுக்களிலும் எருமைகளிலும் கோடைகாலங்களில் மலட்டுத்தன்மை ஏற்பட வாய்ப்பு உண்டு. எனவே கறவை மாடுகளை அதிக வெயில் நேரங்களில் மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது. பகல் நேரங்களில் நல்ல குளிர்ச்சியான இடங்களில் கட்டி வைக்கலாம். தினமும் 2-3 முறை மாடுகளை குளிப்பாட்டிவிட வேண்டும். வெப்ப காலங்களில் பசுமையான புல் உணவு மிகவும் விரும்பத்தக்கது. அடர் தீவனம் வெயில் தணிந்த நேரங்களில் கொடுக்க வேண்டும். குடிப்பதற்கு நிறைய குளிர்ந்தநீர் கொடுக்க வேண்டும். சரியான காலகட்டத்தில் பசுக்களை இனச்சேர்க்கைக்கு விடுவது மிகவும் முக்கியம். பருவமற்ற நேரங்களிலும் பருவம் தவறியும் இனச்சேர்க்கை செய்வது மலட்டுத்தன்மைக்கு ஒரு முக்கிய காரணமாகும். மாடுகள் சினைப்பருவத்திற்கு வந்த 12 முதல் 20 மணி நேரத்திற்குள் செயற்கை முறை கருவூட்டல் செய்ய வேண்டும்.

மாடுகளுக்கு இடும் தீவனம் சரிவிகித கலப்புத் தீவனமாக இருத்தல் அவசியம். கிடாரிகளுக்கு குறைந்தது ஒரு கிலோவும், பால் கறக்கும் மாடுகளுக்கு பாலின் அளவிற்கு தகுந்தவாறும் அடர்தீவனம் கொடுக்க வேண்டும். கறவைமாடுகளின் அன்றாட உடல் பராமரிப்பிற்கு 1.5 கிலோ அடர் தீவனம் தேவைப்படுகிறது. ஒவ்வொரு லிட்டர்

பால் உற்பத்திக்கும் 300-350 கிராம் கூடுதல் அடர்தீவனம் கொடுக்க வேண்டும். கறவை மாடுகளின் சரியான பால் உற்பத்தியை அறிவதற்கு கலப்புத் தீவனத்தைத் தேவையான அளவிற்கு மேல் 1-2 கிலோ வரை அதிகரித்து பால் உற்பத்தி கூடுகிறதா என்று பார்க்க வேண்டும். பசுந்தீவனத்தில்உள்ள வைட்டமின் ஏ சத்து சினை பிடிப்பதற்கு அவசியமாகிறது. எனவே கறவை மாட்டிற்கு நாள் ஒன்றுக்கு 15-25 கிலோ பசுந் தீவனம் கொடுக்க வேண்டும். தீவன மக்காச்சோளம், கொழுக்கட்டைப் புல், கம்பு, நேப்பியர் போன்ற புல் வகைகளும், கிளைரிசிடியா, அகத்தி, சூபாபுல், ஸ்டைலோ, குதிரைமசால் ஆகியவற்றை கொடுக்க வேண்டும்.

(தகவல்: அ.க. திருவேங்கடம், இணை பேராசிரியர், விலங்கின மரபியல் மற்றும் இனப்பெருக்கத் துறை, கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்-637 002)

**நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில்தேயிலைக்கு பதிலாக ரப்பர் பயிரிட பெருந்தோட்ட விவசாயிகள் ஆர்வம்**

*எஸ். சனந்தகுமார்*

*கொச்சி*

*நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள பெருந்தோட்ட விவசாயிகள் தேயிலைக்குப் பதிலாக ரப்பர் பயிரிட அதிக ஆர்வம் காட்டி வருவதாக தெரிய வந்துள் ளது. தேயிலையின் விலை அதிக ஏற்ற இறக்கத்துடன் இருந்து வருகிறது. அதேசமயம் கடந்த ஒரு சில மாதங்களாக ரப்பரின் விலை உள்நாட்டில் மட்டுமின்றி சர்வதேச அளவிலும் அதிகரித்து வருகிறது. இதனை கருத்தில்கொண்டு தேயிலை தோட்ட விவசாயிகள் ரப்பர் பயிரிடுவதில் களம் இறங்கி உள்ளதாக இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.*

*ரப்பர் வாரியம்*

*இதுகுறித்து கவுஹாத்தியில் உள்ள ரப்பர் வாரியத்தின் இணை ஆணையர் கோபிநாத் கூறும்பொழுது, "மேற்கு வங்காளத்தின் வடகிழக்குப் பகுதியில் உள்ள ஒரு சில பெருந் தோட்ட விவசாயிகள் சிறிய அளவில் சோதனை அடிப்படையில், தேயிலை தோட்டங்களில் ரப்பர் பயிரிட தொடங்கியுள்ளனர். மேலும் சில விவசாயிகள் ஐந்து முதல் பத்து ஏக்கர் பரப்பளவில் ரப்பர் சாகுபடி செய்துள்ளனர்" என்று தெரிவித்தார்.*

*உற்பத்தி*

*ரப்பர் வாரியம், நாட்டின் வடகிழக்கு பகுதிகளில் ரப்பர் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதனையடுத்து கடந்த ஒரு சில ஆண்டுகளில் வடகிழக்கு பகுதிகளில் ரப்பர் சாகுபடி செய்யும் பரப்பளவு 71,000 ஹெக்டராக அதிகரித்துள்ளது.*

*நாட்டின் வடகிழக்கு மாநிலங்களில் குறிப்பாக திரிபுராவில் 41,000 ஹெக்டேரில் ரப்பர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனையடுத்து அசாம் (18,000 ஹெக்டேர்) மற்றும் மேகலாயா (6,800 ஹெக்டேர்) ஆகிய பகுதிகளில் அதிக அளவில் ரப்பர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*தற்போது நம்நாட்டின் 6.64 லட்சம் ஹெக்டேரில் ரப்பர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் கேரள மாநிலத்தின் பங்களிப்பு 90 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது. உள்நாட்டில் உற்பத்தியை விட ரப்பர் பயன்பாடு*

அதிகமாக உள்ளது. இதனால் 1 லட்சம் டன் என்ற அளவில் ரப்பருக்கு பற்றாக்குறை உள்ளது. ரப்பரின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவதை கருத்தில் கொண்டு தேயிலை விவசாயிகள் ரப்பர் பயிரிடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருவதாக ரப்பர் வாரியத்தின் உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விலை

சர்வதேச அளவில் இயற்கை ரப்பருக்கான தேவைப்பாடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதேசமயம் தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு ரப்பர் உற்பத்தி இல்லாததால் உள்நாட்டின் ஒரு கிலோ ரப்பரின் விலை ரூ.142 ஆக அதிகரித்துள்ளது. இது, கடந்த 2008-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் நிலவிய விலையாகும்.

ரப்பர் அளிப்பு குறைவாக உள்ளதால், நடப்புச் சந்தையிலும் இதன் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. சர்வதேச சந்தையில் ஒரு கிலோ ரப்பரின் விலை ரூ.148.87 ஆக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.